செ.வெ.எண்: 553 நாள்: 29.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மீண்டும் வருகிற திங்கட்கிழமை (04.10.2021) முதல் பிரதி திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திங்கட்கிழமைதோறும் நடைபெற்று வந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மீண்டும் வருகிற திங்கட்கிழமை (04.10.2021) முதல் பிரதி திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. பொதுமக்கள் அதுசமயம், அரசு அறிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றியும், சமூக இடைவெளியினைக் கடைபிடித்தும், முகக்கவசம் அணிந்தும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களது மனுவில் தங்களது ஆதார் எண், கைப்பேசி எண் மற்றும் இதர விவரங்களை குறிப்பிட்டு மனு அளிக்கவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**